

Vol.24 | No. 4 | April-May 2020

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



April 24, 2020

Happy Feast
To Our Beloved
Bishop
Mar George
Rajendran SDB



HOLY MASS,
KILLIYOOR
15-03-2020

60TH YEAR
INAUGURATION
SOOSAIPURAM
19-03-2020





FAMILY APOSTOLATE
RENEWED OFFICE BLESSING
10-03-2020



The Official Organ of the Diocese of Thuckalay
Volume 24 No :04 April-May 2020



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message I | 02 |
| Bishop's Message II | 08 |
| உயர் பேராயர் சுற்றுமடல் | 14 |
| ஆயர் சுற்றுமடல் I | 17 |
| ஆயர் சுற்றுமடல் II | 19 |
| ஆயர் சுற்றுமடல் III | 23 |
| ஆயர் சுற்றுமடல் IV | 26 |
| ஆயர் சுற்றுமடல் V | 28 |
| ஆயர் சுற்றுமடல் VI | 30 |
| Birthdays & Feastdays | 32 |
| ஆயர் சுற்றுமடல் VII | 34 |
| மறைக்கல்வி | 37 |
| இளையோர் இயக்கம் | 41 |
| வின்செந்தியர்கள் | 44 |
| மறைவட்டச் செய்திகள் | 46 |


*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
Design: **Aswin R**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443261100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/106/2020**

**31 March 2020**

**Dear Readers,**

**Greetings from Bishop's House, Thuckalay!**

These days we are bewildered by the sudden surge of Corona virus in the world and in our country. We are now lock down in our residences without the possibility of undertaking any pastoral activity. In the Second Book of the Chronicles, we read: "Whenever I hold back the rain or send locusts to eat up the crops or send an epidemic on my people, if they pray to me and repent and turn away from the evil they have been doing, then I will hear them in heaven, and forgive their sins, and make their land prosperous again" (2 Chr. 7:13-14).

"You will all have read or at least heard the poem Footprints in the Sand. I want to reproduce it below in the context of the epidemic that we are suffering from:

"One night I dreamed a dream.
As I was walking along the beach with my Lord.
Across the dark sky flashed scenes from my life.
For each scene, I noticed two sets of footprints in the sand,
One belonging to me and one to my Lord.

After the last scene of my life flashed before me,
I looked back at the footprints in the sand.
I noticed that at many times along the path of my life,
especially at the very lowest and saddest times,
there was only one set of footprints.

This really troubled me, so I asked the Lord about it.

'Lord, you said once I decided to follow you,

> You'd walk with me all the way.
> But I noticed that during the saddest and most troublesome times of my life, there was only one set of footprints.
> I don't understand why, when I needed You the most, You would leave me.'
>
> He whispered, 'My precious child, I love you and will never leave you
> Never, ever, during your trials and testings.
> When you saw only one set of footprints,
> It was then that I carried you.'"

Until a few weeks ago, our lives have been normal. Of course, with the usual ups and downs. Then all of a sudden, we were hit with the pandemic - COVID -19 caused by Coronavirus. Now the whole world is reeling under the blow of this unforeseen infectious disease. First identified in China, it has spread all over the world, causing the deaths of thousands of people, especially in China, Italy, Spain and the US. The latest news is that this virus has taken nearly 37820 lives already. In India alone, already 1421 confirmed cases and 41 deaths. There is lot of panic, fear, and anxiety. Now we are all worried about what is going to happen since no successful vaccine has been found to combat this disease so far.

In this alarming situation, we know that God is with us: Emmanuel (Mt. 1:23). But do we believe that in this hurting time, he is not only with us but is really carrying us in his hands? Well, this is really the truth because we were created in his loving providence, and it is under the umbrella of the same providence that we are passing through this crisis. Hence, what is needed is trust in his providence and surrender of our lives into his hands. In the book of Deuteronomy, we read: "There you saw how the Lord your God carried you, as a father carries his son, all the way you went until you reached this place" (Deut. 1:31).

The government has declared a time for quarantine to break the chain of the spread of this virus. In the book of Isaiah 26:20, we read: "Go into your house, my people and shut the door behind you. Hide yourselves for a little while until God's anger is over." We also see in the gospel of John that those who shut themselves in

the room were strengthened by the peace of Christ. That is why I say this is a time to introspect oneself and get reconciled to Christ. "It was late that Sunday evening, and the disciples were gathered together behind locked doors, because they were afraid of the Jewish authorities. Then Jesus came and stood among them. 'Peace be with you,' he said" (Jn 20:19).

Yes, this is one of the times that we need God's real peace; we need Jesus to carry us through. Remember, he is with us always as he promised: "I will be with you till the end of the ages" (Mt. 28:20). He is always with us in his Word, in the sacraments, especially in the Eucharist, and in each one of us. What is important is that we love him and walk with him, trusting in his goodness and mercy.

There is the story of a man who had a dream in which an angel appeared to him with a list of names in his hand. When the man saw the list, he became curious and asked the angel what the list was about. "It is the list of people who love God," replied the angel with a smile. Getting hold of the list, the man found his name was not in the list. Immediately his face fell. Then the angel showed him another list and said that his name was included in that second list. It was the list of people whom God loves!

Yes, God loves us dearly even when we do not remember him and love him. We need to turn to him and ask his special help to tide us over this heart-breaking crisis. Words like, "Do not be afraid," "Fear not," and "Be courageous" appear a few hundred times in the Bible and they are meant for us, to strengthen us and comfort us. Hence, as Jesus says: "Fear is useless; what is needed is faith" (Mk 5:36). Let us now hold onto our faith more than ever before and let us continue to pray with faith that our prayers will be answered.

St Padre Pio used to remind people: "Why worry when we can pray with hope?" Let us try to follow his advice and try to pray constantly with hope and without worry for an early end to this pandemic. Right now we cannot come together to pray as a community. However, united in faith and love, we can pray in our homes for our well-being, as well as the well-being of all humanity. At the same time, let us try to follow the guidelines of both civil and ecclesiastical authorities and take the necessary precautions to

avert this tragedy. May God bless you always with good health and peace!

As we pray, let us pray through the intercession of all the Saints so that we may be saved from the threat of this epidemic and contagious virus. Let us say the little prayer that the Holy Father requests everyone to say in our minds, for the protection from corona virus: "I am vaccinated by the precious blood of Jesus Christ. No virus can touch me." I am also reminded of another scripture verse: "Don't worry about anything, but in all your prayers ask God for what you need, always ask him with a thankful heart" (Phi 4:6). I urge you to remember that "when you pray and ask for something, believe that you have received it, and you will be given whatever you ask for" (Mk 11:24). Let us strengthen one another in our continuous prayer at this time of global catastrophe.

As we are placed under lockdown to contain the virus that is spreading exponentially, I want to make some suggestions that may help you to spend these days fruitfully:

- Appreciate this period of physical isolation, solitude and silence. This is a time of Sabbath rest. Consider this as a prolonged retreat.
- If you are living with others, maintain interaction but observe physical distance (one meter, no touch). Join common meals. Spend time in prayer and sharing with each other the Word of God.
- Observe proper hygiene – constantly wash your hands, clean and disinfect surroundings (especially doorknobs).
- Be well rested, avoid stress. Get adequate sleep (seven to eight hours). Avoid activities that can disrupt sleep patterns.
- Practice meditation (focus on breathing and mindfulness, centring prayer, meditative recitation of the rosary) – holistic method of deepening spirituality, managing stress as well as boosting your immune system.
- Observe healthy diet to improve your immunity to resist the

attack of the virus.

- Since you cannot go out for a walk or a jog, do indoor high intensity exercise (weights, push-ups, etc.), walk around your garden (if you have one) or go up and down the stairs.
- Spend time in reading – feed your mind, update yourself of what's happening, learn something new. Read the Bible and other spiritual books.
- Do something productive or creative: work in your room, write, do research, work on projects, learn the Tamil language well, pursue your hobby, gardening, play and listen to music, compose songs and poems, start a diary, etc.
- Maintain social contact with your parishioners, friends and colleagues through the internet/social media. Give them updates on what is happening. Share with them what you are doing, your thoughts and feelings. Participate in online interactions. Continue to exercise your prophetic mission online: share the Gospel and bring hope to your people. Find out how you can help especially those in need. Share your resources with those who are less fortunate.

## CONCLUSION

The season of Lent is almost over and we are entering the Holy Week, which commemorates the most important events of our salvation. Unfortunately, we are not able to celebrate them as we do in previous years with our people. However, we shall follow the directions that our dear Major Archbishop has given us during these days. In all our liturgical celebrations, kindly remember to pray for our people. As we enter the Holy Week, let us remember Jesus' model of service as he washed the feet of the disciples and called them to break bread in remembrance of him. Let us remember his willingness to give everything, even his life, so that justice might prevail on earth. In the emptiness of Holy Saturday, as we await that triumphal celebration of New Life, let us vow not to stay in our tombs, waiting complacently for human rights to abound, but rather to walk in the path marked out by Jesus to have the courage, and the heart, and the

love to speak out and take action against human rights and other injustice, and to be willing to suffer the consequences that all people might know and experience the world that God intended. We should always trust the Lord and "take delight in the Lord, and He will give the desires of our heart. Commit our way to the Lord; trust in Him and He will do this: He will make our righteous reward shine like the dawn, our vindication like the noonday sun" (Ps 37:4-6).

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB

Bishop of Thuckalay



## மே மாத மாதா வணக்கம்

திருத்தந்தை அவர்கள் மே மாதம் முழுவதும் தாய் மரியாவின் பரிந்துரைக்காக செபிக்க அழைப்பு விடுத்திருக்கிறார். திருத்தந்தையின் இந்த அழைப்புக்கு பதிலுரைக்கும் விதமாக, தமிழக ஆயர் பேரவை இதற்கான அறிவிப்பை வெளியிட்டது. நம்வாழ்வு கத்தோலிக்க வார இதழ் சார்பாக இதற்கான திருத்தந்தையின் செபங்களை மொழியாக்கம் செய்து, அன்றாட செபமாலை செய்வதற்கு உதவும் வகையில் சமூக வலைதளத்தில் வெளி–யிட்டுள்ளது. இது செபமாலை செபிக்கவும், தொற்று நோயிலிருந்து விடுதலை பெறுவதற்கான சிறப்பு செபங்களை ஏற்றெடுக்கவும் உதவியாக இருக்கும்.

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOPS HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/107/2020**

**30 APRIL 2020**

**Dear Readers,**

**Greetings from Bishop's House, Thuckalay!**

Quoting the letter of Pope Francis that he wrote to the faithful for the month of May, let me begin this letter. "The month of May is approaching, a time when the People of God express with particular intensity their love and devotion for the Blessed Virgin Mary. It is traditional in this month to pray the Rosary at home within the family. The restrictions of the pandemic have made us come to appreciate all the more this "family" aspect, also from a spiritual point of view.For this reason, I want to encourage everyone to rediscover the beauty of praying the Rosary at home in the month of May. This can be done either as a group or individually; you can decide according to your own situations, making the most of both opportunities. The key to doing this is always simplicity, and it is easy also on the internet to find good models of prayers to follow.I am also providing two prayers to Our Lady that you can recite at the end of the Rosary, and that I myself will pray in the month of May, in spiritual union with all of you. I include them with this letter so that they are available to everyone.Dear brothers and sisters, contemplating the face of Christ with the heart of Mary our Mother will make us even more united as a spiritual family and will help us overcome this time of trial." The prayers that the Pope has provided are given at the end of this circular.

Mary, as you all are aware, has a unique role in salvation history as the Mother of God, conceived without sin, who by her own free will agreed to bring the "Word made flesh," (John 1:14) our Lord and Saviour Jesus Christ into the world. She is prefigured as the one who would crush the head of the serpent in Genesis 3:15 through her Divine Son. Still she

in no way overshadows him, nor would she ever wish to.Her life in the Gospel years was one of service and great devotion to Jesus, from the cave in Bethlehem where she gave birth to him, to Calvary in Jerusalem where she stood by his cross in his Crucifixion, from Crib to Cross, as it were.

We read when she gives her famous assent to becoming Jesus' mother: "Behold the handmaid of the Lord; be it done to me according to thy word" (Lk 1:38). A short time later she proclaims with joy in the Magnificat when visiting Elizabeth, her relative, that "My soul magnifies the Lord, and my spirit rejoices in God my Saviour" (Lk.1:46-47).The final words of Mother Mary in scriptures are: "Do whatever he [Jesus] tells you" (John 2:5). While she has a somewhat low profile in the Gospels, her words there still resonate with us today and challenge us to follow her example of humility, obedience, and service to God.

This paucity of references to Mary in the Gospels has made many Evangelicals and other Protestants to think of Catholic devotion to her as something pagan, as if we were somehow deifying an ordinary woman, turning her into some kind of interloper hindering our worship of Christ.

Yet in creating Mary to be the only human being without the stain of Original Sin, God nonetheless chose Mary specifically to play a vital role in our salvation. Mary's Immaculate Conception enabled her to bear her Divine Son in a womb free from any taint of sin and enabled her to devote her life to Jesus in the most loving and devoted manner possible. Further, Jesus, as he was dying on the Cross, gave us his mother to be our Mother when he entrusted her to St John's care (Jn 19:26-27).

Mary was conceived and lived a life "full of Grace" (Lk. 1:28). And she wishes very much to share the graces given her by God on our behalf. St Bernardine of Siena once said: "Every grace that is communicated to this world has a threefold course. For by excellent order, it is dispensed from God to Christ, from Christ to the Virgin [Mary], from the Virgin to us." Pope Pius XII was by no means alone when he said "Whenever

we speak of Mary or speak to her, let us not forget that she is really our Mother, for through her we received divine life. She gave us Jesus himself, the source of grace. Mary is a Mediatrix and Dispenser of Graces."

Many non-Catholic Christians may take issue with this notion, referring to the famous quote from St Paul in his letter to Timothy that "there is one mediator between God and men, himself man, Christ Jesus" (1 Tim 2:5). Yet it is important to note that 'one' here means 'first' not 'only.'

Mary, as the beloved Mother of God, makes a powerful intercessor for us indeed! Think of Mary's many church-approved apparitions on behalf of her Son serve to further reinforce our faith that Jesus is indeed the Son of God and the Second Person of the Trinity functioning on a dazzling supernatural plane. His earthly ministry wasnot just that of some philosopher or some wise teacher!Our Blessed Mother has shown us some amazing miracles on his behalf that can strengthen our faith. In these and other such apparitions she has urged all of us "banished children of Eve" to adopt greater piety and devotion to God and neighbour.

Mary has also given us a great weapon in our Spiritual arsenal in the Rosary. St Francis de Sales called it "the greatest method of praying." Blessed Alan de la Roche said this prayer is "the storehouse of countless blessing." And St Padre Pio once remarked that "the Rosary is the weapon given us by Mary to use against the tricks of the infernal enemy." It not only brings us graces, but also is a great way to meditate on the lives of Our Lord and His Blessed Mother! Mary herself once told Blessed Alan that "when you say your Rosary, the angels rejoice, the Blessed Trinity delights in it, my Son finds joy in it too, and I myself am happier than you can possibly guess. After the Holy Sacrifice of the Mass, there is nothing in the Church that I love as much as the Rosary." Mary, thus, always seeks to be a bridge not a barrier to her Divine Son our Lord and Saviour Jesus Christ.

During this month of May, let us contemplate on the virtues of Mother Mary and inculcate various forms of devotions to Mary among our peo-

ple. Kindly follow the notification that I have already passed on to you regarding devotional practices.

## CONCLUSION

We are in the Easter season. Easter is the most joyful time of celebration of the church year. Celebrated against the background of the shadows and darkness of Lent and Holy Week, this season truly becomes a living expression of the hope that God has brought into the world through the death and resurrection of Jesus. Since this hope of renewal and new life, both present and future, is at the heart of the Good News that the Church is commissioned to proclaim and live in the world, every possible avenue of proclaiming that Good News should be utilized. Let us make use of the various aspects of worship that this season offers and especially the Marian month that we are beginning today to become vehicles for God's grace and transforming work in the world, and among our people.

May our Blessed Mother intercede for each one of us!

BISHOP GEORGE RAJENDRAN sdb · Diocese of Thuckalay

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

## First Prayer

O Mary,
You shine continuously on our journey
as a sign of salvation and hope.
We entrust ourselves to you, Health of the Sick,
who, at the foot of the cross,
were united with Jesus' suffering,
and persevered in your faith.

"Protectress of the Roman people,"
you know our needs,
and we know that you will provide,
so that, as at Cana in Galilee,
joy and celebration may return
after this time of trial.
Help us, Mother of Divine Love,
to conform ourselves to the will of the Father
and to do what Jesus tells us.
For he took upon himself our suffering,
and burdened himself with our sorrows
to bring us, through the cross,
to the joy of the Resurrection.
Amen.

We fly to your protection,
O Holy Mother of God;
Do not despise our petitions
in our necessities,
but deliver us always
from every danger,
O Glorious and Blessed Virgin.

## Second Prayer

"We fly to your protection, O Holy Mother of God."

In the present tragic situation, when the whole world is prey to suffering and anxiety, we fly to you, Mother of God and our Mother, and seek refuge under your protection.

Virgin Mary, turn your merciful eyes towards us amid this coronavirus pandemic. Comfort those who are distraught and mourn their loved ones who have died, and at times are buried in a way that grieves them deeply. Be close to those who are concerned for their loved ones who are sick and who, in order to prevent the spread of the disease, cannot be close to them. Fill with hope

those who are troubled by the uncertainty of the future and the consequences for the economy and employment.

Mother of God and our Mother, pray for us to God, the Father of mercies, that this great suffering may end and that hope and peace may dawn anew. Plead with your divine Son, as you did at Cana, so that the families of the sick and the victims be comforted, and their hearts be opened to confidence and trust.

Protect those doctors, nurses, health workers and volunteers who are on the frontline of this emergency, and are risking their lives to save others. Support their heroic effort and grant them strength, generosity and continued health.

Be close to those who assist the sick night and day, and to priests who, in their pastoral concern and fidelity to the Gospel, are trying to help and support everyone.

Blessed Virgin, illumine the minds of men and women engaged in scientific research, that they may find effective solutions to overcome this virus.

Support national leaders, that with wisdom, solicitude and generosity they may come to the aid of those lacking the basic necessities of life and may devise social and economic solutions inspired by farsightedness and solidarity.

Mary Most Holy, stir our consciences, so that the enormous funds invested in developing and stockpiling arms will instead be spent on promoting effective research on how to prevent similar tragedies from occurring in the future.

Beloved Mother, help us realize that we are all members of one great family and to recognize the bond that unites us, so that, in a spirit of fraternity and solidarity, we can help to alleviate countless situations of poverty and need. Make us strong in faith, persevering in service, constant in prayer.

Mary, Consolation of the afflicted, embrace all your children in distress and pray that God will stretch out his all-powerful hand and free us from this terrible pandemic, so that life can serenely resume its normal course.

To you, who shine on our journey as a sign of salvation and hope, do we entrust ourselves, O Clement, O Loving, O Sweet Virgin Mary. Amen.

*Prot. No. 0392/2020*

# உயர் பேராயர் சுற்றுமடல்

## புனித வார திருவழிபாடுகள் - 2020

ஈசோ மெசியாவில் பேரன்புமிக்க சகோதர சகோதரிகளே,

உலகம் முழுவதும் படர்ந்து பிடித்த கொரோனா வைரஸ் தொற்றுநோயால் நாம் அனைவரும் வருத்தமுற்று இருக்கின்றோம். உலகை அழிக்கும் இந்த தொற்று நோயிலிருந்து விடுவிக்க எல்லாம் வல்ல இறைவனோடு வேண்டுவோம். கிறிஸ்துவின் மீட்பின் இரகசியங்களான அவரது பாடுகளையும் சிலுவை மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இந்நாட்களில் நாம் நினைவு கூற இருக்கின்றோம். புனிதவார திருவழிபாடுகளின் கொண்டாட்ட வேளையில் உலக மீட்புக்காக அவர் பட்ட பாடுகளோடு சேர்ந்து நாமும் அவரது இரக்கத்துக்காக செபிப்போம்.

நம்முடையவும் பிறருடையவும் நன்மைக்காக மத்திய மாநில அரசுகள் அமல்படுத்தியிருக்கும் ஊரடங்குச் சட்டம் காரணமாக நமது புனித வார திருவழிபாட்டு முறைகளை நாம் சிறிய அளவில் கொண்டாட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இவ்வேளையில் உரோமையில் வத்திக்கானில் கீழை திருச்சபைகளுக்காக செயல்பட்டுவரும் தலைமைச் செயலகம் வழங்கியுள்ள நிபந்தனைகளைக் கருத்தில் கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள கீழ் குறிப்பிடும் நிபந்தனைகளை சீரோமலபார் மறைமாவட்டங்களிலுள்ள அனைத்து இறைமக்களும் கடைபிடிக்க வேண்டும்.

1. கோவிட் – 19 (கொரோனா வைரஸ்) –ன் ஆதிக்கம் பரவுவதை தடுக்கும் நோக்குடன் அரசு எடுத்திருக்கும் கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு இவ்வருட புனிதவார திருவழிபாடுகளை இறைமக்களின் பங்களிப்பு இல்லாமல் நடத்த வேண்டும்.
2. மறைமாவட்ட ஆயர்கள் தங்களது பேராலயங்களிலும், அருட்தந்தையர்கள் தங்களது பங்கு ஆலயங்களிலும் தேவையான திருப்பணியாளர்களின் (5–நபருக்கு மிகாமல்) பங்களிப்புடன் திருவழிபாடுகள் நடத்த வேண்டும்.
3. தொலைக்காட்சி ஒளிபரப்ப இயலும் என்றால் பேராலயங்கள் மற்றும் பங்குகளில் நடைபெறும் திருவழிபாடுகளை நேரலையாக ஒளிபரப்பலாம்.

4. ஓசானா ஞாயிறு அன்று திருப்பலியிலும் திருவழிபாட்டிலும் பங்கு பெறும் நபர்களுக்காக மட்டும் குருத்தோலைகள் அர்ச்சித்தால் போதும். வேறு எவருக்கும் வழங்கக்கூடாது.
5. புனித மூறோன் எண்ணெய் புனிதவாரத்தில் அர்ச்சிக்க வேண்டாம். அதனை வேறு ஒரு நாள், அதாவது, பெந்தேகோஸ்தே திருவிழா அன்று நடத்தலாம்.
6. பெசகா திருநாளன்று கால் கழுவுதல் திருவழிபாடு நடத்த வேண்டாம்.
7. பெசகா அப்பம் வீடுகளில் தயார் செய்து அவரவர் குடும்பங்களில் முறித்து உண்ண வேண்டும்.
8. புனித வெள்ளி அன்று திருச்சிலுவை முத்தம், சிலுவைப்பாதை போன்றவற்றை தவிர்க்க வேண்டும். பங்குகளில் இத்திருவழிபாடுகளை, விரும்பினால், திருச்சிலுவையின் புகழ்ச்சி திருவிழாவான செப்டம்பர் 14 அன்று இறைமக்களோடு இணைந்து நடத்தலாம்.
9. புனித சனி அன்று புனிதநீர் அர்ச்சிக்க வேண்டாம். திருமுழுக்கு புதுப்பித்தல். புதுநீர் அர்ச்சித்தல் போன்றவற்றை வேறுஒருநாள் உகந்த முறையில் நடத்துவது சிறந்தது.
10. உயிர்ப்பு திருவிழா திருப்பலி, உயிர்ப்பு ஞாயிறு அன்று காலையில் ஒப்புக்கொடுத்தால் போதும்.

புனித வாரத்தில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அந்நாட்களை செப நாட்களாக மாற்ற கவனிக்க வேண்டும். அனைவரும் குடும்ப செபத்திலும் பங்குபெற வேண்டும். புனிதவாரத்தில் அந்நாளுக்குரிய விவிலிய பகுதிகளை வீடுகளில் செபவேளையில் வாசித்து தியானிக்க வேண்டும். திருச்சபை செபங்கள், சிலுவைப்பாதை, இறைஇரக்கத்தின் செபம் போன்ற செபங்களைச் சொல்லி குடும்பமாக செபிக்க வேண்டும். புனித வார சிந்தனைகளை எப்போதும் மனதில் கொண்டு அந்நாட்களை பயனுள்ள முறையில் செலவிட கேட்டுகொள்கிறேன்.அன்பான இறைமக்களே, இக்கட்டான இவ்வேளையில் திருச்சபை எடுத்திருக்கும் தீர்மானங்களை இறைவிருப்பம் என எண்ணி இறைமகன் ஈசோவின் மீட்பின் இரகசியங்களின் அனுபவங்களை மனதளவில் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.கருணை நிறைந்த கடவுள் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

ஈசோ மெசியாவில அன்புடன்

**கார்டினல் ஜார்ஜ் ஆலஞ்சேரி**
**சீரோமலபார் திருச்சபையின் உயர் பேராயர்**

# அருட்தந்தை சாக்கோ பேசில் வரம்பத்துச்சிற CMI அவர்கள் மறைவு



தக்கலை மறைமாவட்டத்தின் முன்னணி மறைப்பணியாளர்களுள் ஒருவரான அருட்தந்தை சாக்கோ பேசில் வரம்பத்துச்சிற CMI அவர்கள் மார்ச் 19, 2020 அன்று காலமானார். அவருடைய நல்லடக்கமானது மார்ச் 21, 2020 அன்று செத்திப்புழா சி.எம்.ஐ. துறவற இல்லத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை அவர்கள் 1938 ஆம் ஆண்டு ஜனவரி 7 அன்று சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டத்தின் சேனங்கிரி என்னும் இடத்தில் பிறந்தார். இவர் 1964, டிசம்பர 1 ஆம் தேதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1978 ஆம் ஆண்டு குமரியில் திருத்தூதுப்பணிக்காக வந்தவர் இப்பகுதியில் சுமார் 42 ஆண்டுகள் பணியாற்றினார். இவர் பிலாங்காலை, காட்டாத்துறை, பரைக்கோடு, முழுக்கோடு, களியல், நெட்டா, பேணு, மேக்காமண்டபம், பள்ளிக்கோணம் மற்றும் கன்னியாகுமரி ஆகியப் பகுதிகளில் இறைப்பணி ஆற்றினார். தனது உடல்நிலை மோசமானதால் 2018 நவம்பர் 11 அன்று சங்ஙனாச்சேரியில் உள்ள சி.எம்.ஐ. குருக்கள் இல்லத்திற்கு ஓய்வுக்காகச் சென்றார். தந்தையின் அரும்பெரும் பணி போற்றதற்குரியது.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

ஈசோ மெசியாவில் பாசம் நிறைந்த அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே, மறைக்கல்வி ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே மற்றும் இறைமக்களே,

கோவிட் – 19 என்ற தொற்று நோயினால் உலகமே முடங்கிக் கிடக்கின்ற இவ்வேளையில், நம் நாட்டிலும் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டு நாம் நம் வீடுகளில் அமர்ந்து திருப்பலி மற்றும் செபவழிபாடுகளில் கலந்துகொண்டு செபித்து வருகின்றோம். இதன் காரணமாக மறைக்கல்வி பிள்ளைகளுக்கு இவ்வருட விசுவாச பயிற்சி விழா(VPV) பங்குகளில் வைத்து நடத்த இயலாது என்றாலும், மறைக்கல்வி, மிஷன் லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்கங்கள் ஒருங்கிணைந்து அதை நம்முடைய இல்லங்களிலே இருந்துகொண்டு ஊடகம் வழியாக நடத்த முயற்சி செய்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த VPV –யை ஒரு இல்லக் கொண்டாட்டமாக மாற்றிட எல்லா பெற்றோர்களையும் பிள்ளைகளையும் கேட்டுக்கொள்கிறேன். கொடுக்கப்பட்டுள்ள TASK – ஐ பிறர் உதவியுடன் குறிப்பிட்ட நேரத்தில் செய்து அவற்றை பொறுப்பான ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒவ்வொரு

பங்கிலும் பங்குத்தந்தையர்கள் தங்கள் மறைக்கல்வி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் உதவியோடு VPV –யை எல்லா பங்குகளிலும் முழுமனதோடும் அர்ப்பண உணர்வோடும் செயல்படுத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புப் பிள்ளைகளே, இறைவன் நமக்கு கொடுக்கின்ற மிகப்பெரிய இந்த அரிய வாய்ப்பினை ஒரு கொடையாக நினைத்து ஆர்வத்தோடும், உணர்வோடும் எல்லா போட்டிகளிலும் கலந்து கொள்ள உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும், நமது குடும்பத்துக்காகவும், பங்கு மக்களுக்காகவும் செபிப்போம்.

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

# மறைமாவட்டங்களுக்கு இடையேயான கூட்டம்

சங்ஙனாச்சேரி மண்டலத்தின் கீழ்வரும் நான்கு மறைமாவட்டங்களான, சங்ஙனாச்சேரி, பாலா, தக்கலை மற்றும் காஞ்ஞிரப்பள்ளி ஆகியவற்றின் கூட்டம் மார்ச் 3, 2020 அன்று பாலா புனித ஜோசப் தொழில்நுட்பக் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இதில் நமது மறைமாவட்டத்திலிருந்து ஆயரும் 12 அருட்தந்தையர்களும் பங்கேற்றனர். இதில் சிறுபான்மையினருக்கான உரிமைகள், மற்றும் இளையோருக்கான மறைக்கல்வி ஆகியவைக் குறித்து விவாதிக்கப்பட்டது.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/19/2020

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

இச்சுற்றுமடல் வழியாக நமது திருச்சபையில் பொது நிலை-யினரால் செயல்பட்டு வரும் 'கத்தோலிக்க காங்கிரஸ்' என்ற அமைப்பினை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு, நமது மறைமாவட்டத்தில் இது 'கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவை' என்னும் பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பை பங்குகளிலும் தொடங்குவதற்கான முயற்சிகளை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சபையின் மீட்புப் பணியோடு இணைந்து அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஓர் அமைப்பே 'கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவை' (கத்தோலிக்க காங்கிரஸ்). சீரோ மலபார் திருச்சபையினரின் அரசியல் பொருளாதார சமூக சமய மேம்பாடு, உள்ளார்ந்த எழுச்சி ஆகிய இலக்குகளோடு இது தொடங்கப்பட்டது. 1918-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ஆம் நாள் சங்ஙனாச்சேரி ஆயர் மார் தோமஸ் குரியாளச்சேரி அவர்கள் தலைமையில் சங்ஙனாச்சேரியில் வைத்து நடைபெற்ற கூட்டத்தில் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு சீரோ மலபார் திருச்சபையின் நூற்றாண்டு தொன்மை கொண்ட பொது நிலை-யினரின் ஒரு அமைப்பு ஆகும். சபையும் சமூகமும் பல்வேறு நெருக்குதலுக்கு உள்ளான காலங்களில் சபையோடு இணைந்து, தோளோடு தோள் கொடுத்த வரலாறு இவ்வமைப்புக்குள்ளது. உறுதியான சமுதாய அடிப்படை சிந்தனைகளை வழங்கிடவும் நம்பிக்கை வாழ்வில் நிலைநிற்கவும், சமுதாய பார்வையுள்ள பொதுநிலையினரை உருவாக்குவதுமே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

மேலும் கல்வி, விவசாயம், அரசியல் ஆகியவற்றின் உரிமைகளுக்குகான போராட்டங்களுக்கு தலைமை தாங்கி இவ்வமைப்பு வழிநடத்தியுள்ளது. உண்மை, நீதி, சேவை ஆகியவற்றை விருது வாக்காக கொண்டுள்ள இப்பேரவை, நூற்றாண்டுகள் கடந்த பின்பும் நம் முன்னோர்களின் கனவுகளை சீரோ மலபார் திருச்சபையில் இன்றும் நனவாக்கி வருகின்றது. இவ்வமைப்பானது தற்போது இந்தியாவிலுள்ள அனைத்து சீரோ மலபார் மறைமாவட்டங்களிலும் இந்தியாவுக்கு வெளியே 25 நாடுகளிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 2019-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி துபாயில் வைத்து நடைபெற்ற 'முதல் சர்வதேச மாநாட்டில்' 25 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மக்களின் பொருளாதார பாதுகாப்பு மற்றும் மேம்பாடுகள் பற்றி விவாதித்தனர். பல்வேறு திட்டங்களுக்கு அடிகோலிய இம்மாநாடு திருச்சபைக்கும் அதன் மக்களுக்கும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் பொருளாதார மேம்பாட்டிற்காக திட்ட மேம்பாட்டு குழுவும், கல்வி மேம்பாட்டிற்காக கல்வியாளர்கள் குழுவும், அரசு நலத்திட்டங்களை மக்களிடையே எடுத்துச் செல்ல ஊராட்சி அளவிலான மக்கள் சுயஉதவி குழுவும், விவசாயத்தின் நலனைக் காண விவசாய குழுவும் ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நமது மறைமாவட்டத்தில் 'கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவை' 01-12-2019 அன்று மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழாவின் போது கல்லுவிளை சீனாய் தியான மையத்தில் வைத்து அதிகார பூர்வமாக தொடங்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 23-02-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று எனது தலைமையில் நடைபெற்ற கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அகில உலக 'கத்தோலிக்க காங்கிரஸ்' தலைவர் வழக்கறிஞர் திரு. பிஜு செபாஸ்டின் அவர்கள் கலந்து கொண்டு, இவ்வமைப்பின் முக்கியத்துவத்தையும் நோக்கத்தையும் அதன் கோட்பாடுகளையும் குறித்து விளக்கம் அளித்தார். அன்றைய தினம் 31-05-2020-க்கு முன்பாக கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவை அனைத்து மறைவட்டங்களிலும் தொடங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி 29-03-2020 படந்தாலுமூடு, 19-04-2020 களியல், 03-05-2020 சூசைபுரம், 10-05-2020 மஞ்சாலுமூடு,17-05-2020ஆறுகாணி,24-05-2020

நித்திரவிளை, 31-05-2020 தக்கலை,பிலாங்காலை ஆகிய மறைவட்ட ஆலயங்களில் வைத்து மறைவட்ட அளவிலான கூட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் அந்தந்த மறைவட்டத்திற்குட்பட்ட பங்குகளிலிருந்து ஆண், பெண் மற்றும் இளைஞர்கள் உட்பட குறைந்த பட்சம் ஐந்து பேர் கலந்து கொள்ளச் செய்யுமாறு பங்குதந்தையர்களைத் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைப்பாளர்கள் பங்குத் தந்தையர்களையும் உங்களையும் சந்திப்பார்கள்.

நமது மறைமாட்டத்தின் கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவையின் இயக்குநராக அருட்தந்தை வினு டி ஜோசப் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து, திரு ஜாண் வயலின்கரை இதன் தலைவராகவும், திரு சவுந்தரராஜ் அவர்கள் இதன் செயலராகவும், திரு ராஜா எறிக் காட்வின் அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர். இவ்வேளையில் உங்களது ஒத்துழைப்பை இவர்களுக்கு வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய காலச்சூழலுக்கேற்ப நமது செயல்களைத் திட்டமிட்டு மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் நம்மவர்க்கு நல்ல வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் பாதுகாப்பான வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்கள் மூலம் நல்ல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவையோடு இணைந்து செயல்பட உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

சிறப்பு செய்தியாக நாம் தற்பொழுது மேற்கொண்டுள்ள தவக்காலத்தின் சிறப்பையும் அதற்கு கடைபிடிக்கவேண்டிய பக்தி முயற்சிகளையும் உங்களுக்கு இவ்வேளையில் நினைவுபடுத்துகிறேன்.

இக்காலகட்டத்தில் நோன்பு, தவம் மற்றும் ஈகை போன்றவற்றில் ஈடுபடுவதோடு, பிறரை மன்னித்து நமது வாழ்வை புதுப்பிக்கும் காலகட்டமாகவும் இது அமையட்டும் என செபிக்கின்றேன்.

இத்தவக்காலத்தில் எடுக்கின்ற சிறப்பு உண்டியல் காணிக்கை நமது மறைமாவட்டத்தில் வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டத்திற்கு பயன்படுத்தப்படும். நமது மறைமாவட்ட வெள்ளிவிழாவோடு இணைந்து மேற்கொள்ளப்பட இருக்கும் இத்திட்டத்தில் அனைவரும் தாராள மனதுடன் ஒத்துழைக்க கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பொதுத் தேர்வு எழுதுகின்ற நமது பிள்ளைக்களுக்காக செபிப்பதோடு அவர்களுக்கு தனிகவனம் அளித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும்

கேட்டுக்கொள்கிறேன்.

12-ம் வகுப்பு தேர்வு முடிந்த பிறகு, உயர்கல்விக்கான ஆயத்த இலவச சான்றிதழ் பயிற்சி ஒன்றை நமது மறைமாவட்டம் மார்ச் 30 முதல் ஏப்ரல் 18 வரை நமது அல்போன்சா கலைக் கல்லூரியில் வைத்து நடத்த ஏற்பாடு செய்துள்ளது. பயிற்சியில் பங்குபெறும் பிள்ளைகள் சென்றுவர வாகன வசதியும் பெண்பிள்ளைகளுக்கு தேவையானால் விடுதி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நமது மறைமாவட்ட அனைத்து பிள்ளைகளும் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நமது மறைமாவட்டத்தில் இறைப்பணி செய்ய ஆர்வம் உள்ள ஆண் பிள்ளைகளை 2020 ஏப்ரல் 23 முதல் 25 வரை நடைபெறும் இறை அழைத்தல் முகாமுக்கு அனுப்பி வைக்க பெற்றோராகிய நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். பெண் பிள்ளைகளுக்கான முகாமும் தொடர்ந்து நடத்தப்படும். இவ்வேளையில் இறை அழைத்தலுக்காக செபிப்பதோடு அவர்களை ஊக்குவிக்க உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கோடைவிடுமுறையில் மறைக்கல்வி நிலையம் ஒருங்கிணைக்கும் விசுவாச பயிற்சி விழாவில் பங்கிலுள்ள அனைத்து பிள்ளைகளும் தவறாமல் கலந்து கொள்ளவும், பெற்றோர்கள் அதை சிறப்புறச் செய்ய தேவையான நிதி உதவியும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மறைக்கல்வி நிலையம் உருவாக்கிய சிறப்பு விசுவாச பயிற்சி பாட புத்தகத்தை பிள்ளைகள் பெற்றனரா என்பதை பெற்றோர்கள் உறுதி செய்யவேண்டும் என்றும் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன்.

ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை *08.03.2020* ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/20/2020

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்,ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று தடுப்பு தொடர்பாக

கொரோனா வைரஸால் உருவாகியுள்ள கோவிட்-19 நோய் கடந்த இரு மாதங்களாக உலகநாடுகளை அச்சுறுத்தி வருகின்றது. மத்திய அரசு கோவிட்-19 நோய்த்தொற்றை பேரிடராக அறிவித்துள்ளது. இந்நோய் குறித்து நாம் பீதியடையத் தேவையில்லை என்றும், நோய் வராதவாறு நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளை பொறுப்புணர்வோடு மேற்கொள்ளவேண்டும் என்றும் பல்வேறு வழிகளில் நாம் விழிப்புணர்வு பெற்றுள்ளோம்.

உலகசுகாதார நிறுவனம் மற்றும் மத்திய-மாநில அரசுகள் பல முன்னெச்சரிக்கை அறிவுரைகளை நமக்கு வழங்கியுள்ளன. தமிழ்நாடு பொதுசுகாதாரச் சட்டத்தின்கீழ் அறிவிப்பும் நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் அதிக அளவில் மக்கள் கூடுவதை அடுத்த 15 நாட்களுக்குத் தவிர்க்க வேண்டும்; கூட்டம் நிறைந்த பொது இடங்களுக்கு குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் செல்வதைத் தவிர்க்க வேண்டும்; வீட்டுக்குள் நுழையும் போதும் அவ்வப்போதும் கைகளை சோப்புபோட்டு சுத்தமாகக் கழுவவேண்டும் என்றும் அரசு வெளியிட்டுள்ள அறிவுறுத்தலையும் ஆன்மீக, சமூக, கலாச்சார விழாக்களில் 50 பேருக்குமேல் கூடுவதற்குத் தடைவிதிக்கப்படுகிறது என்ற செய்தியையும் நாம் நினைவில் கொள்வோம்.

வேகமாகப்பரவும் தன்மையுடைய இந்நோ-யினின்று நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வத்திக்கான் நகரிலும், பல்வேறு தலத்திருஅவைகளிலும் முன்னெடுத்துள்ள தற்காப்புச் செயல்பாடுகளை நாமும் கருத்தில் கொண்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில முன்னெச்சரிக்கை முயற்சிகளை நடைமுறைப்படுத்திட உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

1. வீட்டிலிருந்து ஆலயத்திற்கு வருமுன் கைகளை சோப்பு பயன்படுத்தி நன்றாகக் கழுவி சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.
2. ஆலய வாயில்களில் வைக்கப்பட்டுள்ள தீர்த்த கலசங்களைக் காலியாக வைக்க வேண்டும்.
3. சளி, காய்ச்சல், இருமல் போன்ற பாதிப்பு உள்ளவர்கள் ஆலயத்திற்கு வருவதைத் தவிர்ப்பது நன்று.
4. வாழ்த்துக் கூறுவதற்கும், அமைதியைப் பகிர்வதற்கும் கை குலுக்குவதற்கும் பதிலாக இரு கைகளைக் கூப்பி சமாதானம் வழங்க வேண்டும்.
5. இடவசதி குறைவானதும், மக்கள் கூட்டம் அதிகமுமான பங்குகளில் ஞாயிறு திருப்பலியின் எண்ணிக்கையை ஒன்றுக்குமேல் அதிகப்படுத்த வேண்டும்.
6. திவ்விய நற்கருணை – திருஉடல் மட்டும் கைகளில் மார்ச் 31 வரை வழங்கப்படும்.
7. இந்நாட்களில் திருப்பாடல் 23, 51, 91, இரக்கத்தின் செபமாலை, அன்னை மரியாளிடம் சிறப்பு வேண்டுதல்கள் ஆகியவற்றை ஏறெடுக்க இறைமக்களை வலியுறுத்துகிறேன்.
8. மறைக்கல்வி, உறவியம், குழு செபம் மற்றும் பக்த இயக்கங்களின் கூட்டங்களை இம்மாதம் 31-ஆம் நாள் வரை தவிர்க்க வேண்டும்.
9. மறைக்கல்வி தேர்வுகள் குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும்.
10. இந்த ஆண்டின் தவக்காலத்தில் திருப்பயணமாக பல்வேறு ஆலயங்களுக்குச் செல்வதை தவிர்ப்பது நன்று.
11. பெரிய வெள்ளியன்று, புனித வெள்ளி திருச்சடங்கு வேளையில் திருச்சிலுவையை முத்தம் செய்வதற்கு பதிலாக, வரிசையில் வந்து, பக்தியோடு வணக்கம் செலுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.

12. வெளிமாநிலங்களில் பணிசெய்து திரும்பி வருகின்றவர்கள் காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் இருந்தால் மருத்துவ ஆலோசனை பெற்றபின் தம் வீட்டுக்கு வருவது நன்று எனும் அறிவுரையைக் கருத்தில் கொள்வோம்.

கோவிட்–19 நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அனைவரும் குணமளிக்கும் இறைவல்லமையால் விரைவில் குணமடைய நாம் நம்பிக்கையோடு வேண்டுவோம். தேவையற்ற அச்சத்தை விடுத்து, இறைபராமரிப்பில் நம்பிக்கைக் கொண்டு, நாமும் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளை பொறுப்புடன் இணைந்து செயல்படுத்த உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இணைப்பு:

i. மாவட்ட ஆட்சித்தலைவர் சுற்று அறிக்கை.

ii. நாகர்கோவில் மாநகராட்சியில் இருந்து பெறப்பட்டுள்ள அறிவிப்பு.

iii. மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்பநலத்துறை வழங்கியுள்ள விளக்க அறிக்கை.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!.

ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு:

- இந்த சுற்றுமடலை 22.03.2020 ஞாயிறு திருப்பலிக்குப்பின் வாசிக்கவும்.
- அரசு வழங்கியுள்ள அறிவுப்புகளை ஆலய விளம்பர பலகைகளில் இட வேண்டும்.
- திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறப்பு செபத்தை வீடுகளில் செபிக்க வேண்டும்

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/R/21/2020

## ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாதுக!**

உலகை தற்போது ஆட்டி படைத்துக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் (கோவிட் – 19) –ன் ஆதிக்கம் நமது நாட்டிலும் பரவி வருவதைத் தடுக்கும் நிலையில் மத்திய – மாநில அரசும், மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை வழங்கியுள்ள அறிக்கையை நமக்காகவும் பிறர் நலனுக்காகவும் நாம் கடைபிடிக்க முன் வருவோம்.

கத்தோலிக்க இறைமக்களின் நம்பிக்கையின் கொண்டாட்டமான திருப்பலியை வருகின்ற ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 22, 2020 அன்று மறைமாவட்ட மக்கள் பங்குகொள்வதிலிருந்து மறைமாவட்ட ஆயர் என்ற நிலையில் உங்களுக்கு நான் விடுப்பு அளிக்கின்றேன். பங்குத் தந்தையர் தங்கியிருக்கும் தேவாலயங்களிலும் மறைத்தொண்டு தளங்களிலும் திருப்பலிகள் பங்குத் தந்தையரால் வழக்கம்போல் ஒப்புக்கொடுக்கப்படும். பங்குமக்கள் அவரவர் வீடுகளில் இருந்தவாறே பக்திபூர்வம் ஆன்மீகமாக திருப்பலியில் பங்கு கொள்ள கேட்டுக்கொள்கிறேன். ஒலிபரப்பி உடைய பங்குகளில் பங்குத்தந்தை ஒப்புக்கொடுக்கும் திருப்பலியை அவர் ஒலிபரப்புவார். அவ்வாறே மறைமாவட்டத்திலிருந்து திருப்பலி விஹ் ஜிஸ் தொலைக்காட்சி வழியாக காலை 7 மணிக்கு ஒளிபரப்பப்படும். கீழே குறிப்பிட்ட சேனல் எண்களில் இத்திருப்பலி ஒளிப்பரப்பப்படும்.

### Channels:

1. Marthandam Network SCV

Digital Box 307

2. Thuckalay SCV Digital Box 309

3. Kanyakumari District full TCCL 164.

4. அத்தோடு TCYM மற்றும் Tamil Catholic Tv online வழியாக ஒளிபரப்பப்படும்.

பங்குத்தந்தையர் தங்காத இடங்களில் அருட்சகோதரிகள் தங்கியிருப்பின் அவர்களுக்காக சனிக்கிழமை, 21 மார்ச் 2020 அன்று மாலையில் ஞாயிற்றுக்கிழமை திருப்பலி பங்குத்தந்தையர் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

இந்நாட்களில் தேவாலயங்கள் மக்களின் செபத்திற்காக திறந்து வைக்கப்படும். தனிநபர் செபம் இந்நாட்களில் ஊக்குவிப்பதோடு நீங்கள் விரும்பும் நேரங்களில் தனியாக வந்து செபிக்க உங்களை கேட்டுக்கொள்கின்றேன். இத்தவக்காலத்தில் செபத்திலும், இறை வார்த்தைகள் வாசிப்பதிலும், நோன்பு இருப்பதிலும் கவனம் செலுத்தி கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக செபத்தில் ஈடுபடுவோம்.

அரசு வழங்கியுள்ள நிபந்தனைகளைக் கடைபிடிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தனிநலன் பேணுவதோடு பிறர் நலனையும் இவ்வேளையில் பேண முன்வருவோம்.

இறைவனோடுள்ள அன்புறவில் ஆழப்படவும் வாழ்க்கை புதுப்பித்தல் வழி நம்மைப் புனிதப்படுத்தவும் இந்த நோன்பு காலம் நமக்கு உதவட்டும்.

உங்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து இவ்வேளையில் செபிக்கின்றேன். இறைவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாத்து இறைஅருள் உங்களுக்கு வழங்குவாராக.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் **SDB**

தக்கலை மறைமாவட்ட ஆயர்

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12, Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/22/2020

## ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

உலகை தற்போது ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் (கோவிட் – 19) –ன் ஆதிக்கம் நமது நாட்டிலும் பரவி வருவதைத் தடுக்கும் நிலையில் மத்திய – மாநில அரசும், மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை வழங்கியுள்ள அறிக்கையை நமக்காகவும் பிறர் நலனுக்காகவும் நாம் கடைபிடிக்க முன் வருவோம்.

கத்தோலிக்க இறைமக்களின் நம்பிக்கையின் கொண்டாட்டமான திருப்பலியை வருகின்ற 22 மார்ச் 2020 முதல் 31 மார்ச் 2020 வரை மறைமாவட்ட மக்கள் பங்குகொள்வதிலிருந்து மறைமாவட்ட ஆயர் என்ற நிலையில் உங்களுக்கு நான் விடுப்பு அளிக்கின்றேன்.

அவ்வாறே செப கூட்டங்கள், பக்த இயக்கங்களின் கூடுகைகள், உறவியம் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மறைமாவட்ட குருக்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் உங்களுக்காக ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பர். பங்குமக்கள் அவரவர் வீடுகளில் இருந்தவாறே பக்திபூர்வம் ஆன்மீகமாக திருப்பலியில் பங்கு கொள்ள கேட்டுக்கொள்கிறேன். ஒலிபரப்பி உடைய பங்குகளில் பங்குத்தந்தை ஒப்புக்கொடுக்கும் திருப்பலியை அவர் ஒலிபரப்புவார்

இந்நாட்களில் தேவாலயங்கள் மக்களின் செபத்திற்காக திறந்து வைக்கப்படும். தனிநபர் செபம்

இந்நாட்களில் ஊக்குவிப்பதோடு நீங்கள் விரும்பும் நேரங்களில் தனியாக வந்து செபிக்க உங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

இத்தவக்காலத்தில் செபத்திலும், இறை வார்த்தைகள் வாசிப்பதிலும், நோன்பு இருப்பதிலும் கவனம் செலுத்தி கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக செபத்தில் ஈடுபடுவோம்.

அரசு வழங்கியுள்ள நிபந்தனைகளைக் கடைபிடிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தனிநலன் பேணுவதோடு பிறர் நலனையும் இவ்வேளையில் பேண முன்வருவோம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் **SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

## கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில், பெருந்தொற்று மீட்புப் பணியானது மேற்கொள்ளப்பட்டது. இயக்குநர் அருட்தந்தை சஜி எளம்பாசேரி மற்றும் துணை இயக்குநர் அருட்தந்தை அபி பூவத்துமூட்டில் ஆகியோர் தலைமையில் உணவுப்பொருட்கள் பல்வேறு பங்குகளுக்கு வழங்கப்பட்டது.

## இல்வாழ்வு இயக்கம்



இல்வாழ்வு இயக்கத்தின் இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி அவர்கள் பங்கு வாரியாக மாதுறு ஜோதிஸ் உறுப்பினர்களை உயிரூட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12 Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letterNo GR/23/2020

# ஆயர் சுற்றுமடல்

**ஈுசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈுசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

கோவிட் – 19 (கொரோனா வைரஸ்) எனும் தொற்றுநோய் அதிக அளவில் பரவி வரும் இவ்வேளையில் மத்திய–மாநில அரசுகளின் வேண்டுதலுக்கு கீழ்ப்படிந்து வீடுகளில் இருக்க கவனிப்போம். கொரோனா வைரசினால் ஏற்படும் விளைவுகளையும் தாக்கங்களையும் எண்ணி நாம் அனைவரும் கவலைக்குள்ளாயிருக்கின்றோம். ஆயினும் இப்போது பயம் தேவை அல்ல, மாறாக, மனத்திடனும், கவனமும், செப வாழ்வும், இறைவிசுவாசமுமே, பயம். அரசு விடுக்கும் நிபந்தனைகளை கடைபிடித்து அன்பிலும் செபத்திலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வோம். அவ்வாறே இறைவனில் முழு விசுவாசம் கொண்டு நமது அடுத்திருப்பவருக்கு நல்ல சமாரியன் ஆவோம். இவ்வாறு நம்மால் இந்த கொடிய தொற்று நோயை முறியடிக்க முடியும்.

1. மங்கள வார்த்தை திருநாளான நேற்று (மார்ச் 25) திருத்தந்தையோடு சேர்ந்து மாலை 4.30 மணிக்கு "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்னும் செபத்தில் ஒன்றிணைந்து செபித்தீர்கள் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நமது அனைத்து துக்கங்களையும் கவலைகளையும் தூய கன்னிமரியாவின் பாதத்தில் ஒப்புக்கொடுப்போம்.

2. மார்ச் 27 (வெள்ளிக்கிழமை) இரவு 10.30 மணிக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களோடு இணைந்து திவ்விய நற்கருணை ஆராதனையில் வீடுகளில் இருந்தவாறே நாம் பங்கெடுப்போம்.

அருட்தந்தையர்கள் தங்களது ஆலயங்களிலும் அருட்சகோதரிகள் கன்னியர் இல்லத்திலும் ஆராதனை நடத்தி திருத்தந்தையோடு சேர்ந்து செபிக்க வேண்டும். இறைமக்கள் அனைவரும் வீடுகளில் இருந்தவாறே ஆராதனையில் பங்குகொள்ள கேட்டுக்கொள்கிறேன். இந்நாளை நாம் அனைவரும் 'செப நாளாக' கடைபிடிக்கின்றோம்.

3. நமது அருட்தந்தையரும் அருட்சகோதரிகளும் இந்நாட்களில் நற்கருணை இயேசுவின் முன் பலமணி நேரங்கள் ஆராதனைக்காக செலவிடுகின்றனர். இறைமக்கள் தங்களது செப வேண்டுதல்களை தொலைப்பேசி வழியாக அறிவித்து பரிந்துரை செபம் தேடலாம்.

4. வருகின்ற 21 நாட்கள் நாம் அனைவரும் நமது வீடுகளில் நேரத்தை செலவிடுகின்றோம். இவ்வேளையில் 'குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை' என்ற உணர்வுடன் செபத்திலும், அன்புறவிலும், சுற்றுபுறப் தூய்மையைப் பாதுகாப்பதிலும், அன்றாட வேலைகளிலும் ஈடுபடுவோம். இந்நாட்களில் குழந்தைகளோடு அதிக நேரம் செலவிடவும், செபிப்பதற்கு கற்றுக் கொடுப்பதோடு மறைக்கல்வி பாடங்கள் கற்க உதவி செய்வோம். அவர்களை இறைவார்த்தைகள் வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துவோம். செபத்திற்காக தனி நேரம் ஒதுக்கி அனைவரும் ஒன்றாய் செபமாலை சொல்லிச் செபிக்க உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

5. நமது அண்டை அயலாரோடுள்ள அன்புறவில் வாழ முயற்சி செய்வோம். உடல் இடைவெளி இருந்தாலும் ஆன்ம இடைவெளியைச் சுருக்கி அவர்களுக்காக செபிப்போம். 'தன்னைத்தான் அன்பு செய்வது போல பிறரையும் அன்பு செய்து' அவர்களின் உடல்நலன் பாதுகாக்க முன்வருவோம். நம்மைச்சுற்றி வாழுகின்ற ஏழை எளிய மக்களை கருத்தில் கொண்டு, இன மொழி சமய வேறுபாடின்றி ஆபத்தில் அவர்களுக்கு உதவி செய்ய முன்வருவோம். ஏழைகளின் வறுமை நிலையை முன்னிற்கண்டு நமக்கு கிடைக்கின்ற விளைச்சலைப் பாதுகாத்து பகிர்ந்தளிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனது ஊரில் ஒருவரும் பட்டினிக் கிடக்கக் கூடாது என்ற சிந்தனையை நாம் மனதிற் கொள்வோம். நமது வீடுகளில் உணவுப் பொருட்களைப் பாதுகாக்க முன்வருவோம். ஆபத்துக் காலங்களில் அதை பகிர்ந்தளிப்போம்.

இறைமக்களாகிய உங்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து

செபிக்கின்றேன். மத்திய-மாநில அரசின் நிபந்தனைகளையும் ஆயர் பேரவையின் வேண்டுதல்களையும் கடைபிடிப்போம். இறைவனின் தூய ஆவியார் உங்களுக்கு அரணும் கோட்டையுமாக இருந்து பாதுகாப்பாராக. இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு:

- புனித வார கொண்டாட்டங்களுக்கான தகவல்கள் பின்னர் உங்களுக்கு வழங்கப்படும்.
- இந்த ஆயர் சுற்றுமடல் உங்கள் பங்கிலுள்ள ஒவ்வொரு மக்களையும் அருட்சகோதரிகளையும் சென்றடைய ஆவன செய்ய வேண்டும்.

## FEASTDAYS OF REV FATHERS

| FEAST DAYS - APRIL - 2020 | |
|---|---|
| Bishop George Rajendran SDB | 24 |
| Fr. Arun Chechottu CMI | 24 |
| Fr. Geo Choozhikunnel | 24 |
| Fr. Jinoy Thottiyil | 24 |
| Fr. Jins Pulingappallil | 24 |
| Fr. Jipson Chully MCBS | 24 |
| Fr. Jose Muttathupadom | 24 |
| Fr. Joshy Thadiyananical CMI | 24 |
| Fr. Rony Peedikakal MCBS | 24 |
| Fr. Sinoy Panackachalil MCBS | 24 |
| Fr. Sumesh Valliyamthadathil | 24 |
| Fr. John Paul Puthuvalputhen | 27 |
| **FEAST DAYS - MAY - 2020** | |
| Fr. Alex Puthettu | 03 |

# BIRTHDAYS OF REV FATHERS

| FEAST DAYS - APRIL - 2020 | |
|---|---|
| Fr. Antony Madappurackal | 01 |
| Fr. Abin Poovathummoottil | 01 |
| Fr. Vinu D Joseph | 02 |
| Fr. Jimmy Thekkekadumathil | 04 |
| Fr. Ajeesh Attiyil | 08 |
| Fr. Josy Puthenpurayil | 10 |
| Fr. Arun Chechottu | 11 |
| Bishop George Rajendran SDB | 14 |
| Fr. Dency Mundunadackal | 14 |
| Fr. Thomas Thekkethala CMI | 15 |
| Fr. Jacob Aiyammathra | 24 |

| FEAST DAYS - MAY - 2020 | |
|---|---|
| Fr. Tobin Alappurackal | 02 |
| Fr. Subin Scaria (John) Puthenpurackal | 04 |
| Fr. Augustine Thottananiyil CMI | 05 |
| Fr. Davis Karukappally CMI | 10 |
| Fr. John Paul Puthuval Puthen | 17 |
| Fr. Thomas George Pockavarayath CMI | 20 |
| Fr. Ginoy Thottiyil | 24 |
| Fr. Jiji Koipuram | 25 |
| Fr. Robin Kurumullil | 25 |
| Fr. Christudas M. | 28 |
| Fr. Tinu Kottackaparampil CMI | 29 |
| Fr. Justin Sutheesh | 31 |

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/24/2020

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

இறைஈசோவில் அன்புமிக்க அருட்தந்தையரே, அருட்சகோதரிகளே, இறைமக்களே, உங்கள் அனைவரையும் இந்நாட்களில் நினைவு கூர்ந்து செபிக்கின்றேன். கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்து செபிப்போம். அத்தோடு நாட்டு மக்களின் நலனுக்காக நமது உயர் பேராயர் எடுத்திருக்கும் புனிதவார திருவழிபாடுகளின் நிபந்தனைகளைக் கடைபிடிப்போம். இறைஈசோவின் மீட்பின் இரகசியங்களான, பாடுகள், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் கொண்டாட இறைவன் நமக்கு வரம் அருளுவார் என்ற நம்பிக்கையுடன் புனித வாரத்தில் ஆன்ம தயாரிப்புடன் பக்தியோடு ஆன்மீகமாய் வீடுகளில் இருந்தவாறே பங்கு கொள்வோம்.

பங்குகளில் இந்நாட்களில் யாராவது இறந்தால் அவர்களது இறுதி அடக்கச் சடங்கிற்கு முன் காவல் நிலையத்தை அறிவித்து அவர்களது ஆலோசனைகளை கடைபிடிக்க வேண்டும். இறுதி அடக்க வேளையில் நெருங்கிய உறவினரும் உற்றாரும் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். அடக்கச் சடங்கு தொடங்கும்முன் உடல் வைக்கப்பட்டிருக்கும் பெட்டி அடைத்திருக்க வேண்டும். இவ்விதி முறைகளை அனைவரும் கடைபிடிக்க வேண்டும்.

1. புனிதவாரத்தில் நான் ஆயர் இல்லத்தில் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியும் திருவழிபாடுகளும் மறைமாவட்டத்திலிருந்து

Tamil Catholic Tv, MyTv தொலைக்காட்சி மற்றும் TCYM online வழியாக நேரலையாக ஒளிபரப்பப்படும்.

ஓசானா ஞாயிறு திருப்பலி– காலை 7 மணிக்கு

பெசகா வியாழன் திருப்பலி– மாலை 6 மணிக்கு

புனித வெள்ளி திருவழிபாடு– மாலை 3 மணிக்கு

புனித சனி திருப்பலி– காலை 7 மணிக்கு

உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி– காலை 7 மணிக்கு

திருப்பலியிலும் திருவழிபாடுகளிலும் பக்திபூர்வம் கீழ்குறிப்பிடும் முறையில் கலந்து கொள்ள வேண்டும்.

2. வெள்ளைத் துணியால் அலங்கரிக்கபபட்ட மேஜையில் திருச்சிலுவையும், திருவிவிலியமும், எரியும் திரிகளும் வைக்க வேண்டும்.

3. திருப்பலியும் திருவழிபாடுகளும் நேரலையாக காணும் தொலைக்காட்சி அல்லது அலைபேசி இதன் அருகே வைக்கப்பட வேண்டும்.

4. திருப்பலியில் பங்குகொள்கிறோம் என்ற உணர்வுடன் திருப்பலிக்கு உகந்த நல்ல ஆடையுடன் பங்கு கொள்ள வேண்டும்.

5. திருப்பலியிலும் திருவழிபாடுகளிலும் தொடக்கம் முதல் இறுதி வரை முழுமையாக குடும்பமாக பங்கேற்க வேண்டும். இதற்கு இடையே வெளியே செல்வதையும் கவனக்குறைவையும் தவிர்க்க வேண்டும்.

6. திவ்யநற்கருணை ஆன்மீக முறையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இறைவன் ... றவாக ஆசீர்வதிப்பாராக!

BISHOP GEORGE RAJENDRAN SDB
Diocese of Thuckalay

ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இந்த ஆயர் சுற்றுமடல் உங்கள் பங்கிலுள்ள ஒவ்வொரு மக்களையும் அருட்சகோதரிகளையும் சென்றடைய ஆவன செய்ய வேண்டும்.

## இரங்கல் செய்தி



இடுக்கி மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மார் மாத்யு ஆனிக்குழிகாட்டில் அவர்கள் மே 1, 2020 அன்று இயற்கை எய்தினார். அவரது நல்லடக்கச் சடங்கு மே 5, 2020 அன்று நடைபெற்றது. எளிமையான வாழ்வு வாழ்ந்த அவர்கள் மக்கள் நலனில் அக்கரை கொண்டவராக இருந்தார். ஏழைகள், நோய்வாய்ப்பட்டோர் ஆகியோரின் நலன்களில் கரிசனை கொண்ட அவர், விவசாயிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தார். தக்கலை மறைமாவட்டம் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதோடு, அவரின் பிரிவால் வாடும், இடுக்கி மறைமாவட்ட ஆயர் மார் ஜாண் நெல்லிக்குந்நேல், மறைமாவட்ட குருக்கள் மற்றும் இறைமக்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிக்கிறது.

## குருத்துவ அருட்பொழிவு தள்ளி வைப்பு

திருத்தொண்டர்கள் ரோபின் ஜோஸ் மற்றும் டோஜி செபாஸ்டின் ஆகியோரின் குருத்துவ அருட்பொழிவானது மறு தேதி குறிப்பிடப்படாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மறைமாவட்டம் சார்ந்த பொது நிகழ்வுகள் ஊரடங்கு, முடிவுக்கு வந்த பின்னர் ஆரம்பிக்கும்.



CATECHISM
மறைக்கல்வி

"உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல கடவுளின் வல்லமையே"
( 1கொரிந்தியர் 2 : 5 )

# VPV விசுவாசப்பயிற்சி விழா

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் காரணமாக இந்த வருடம் **(VPV)** விசுவாச பயிற்சி விழா இணையதளம் வழியாக நடத்த நற்செய்தி நிலைய தலைமையகத்திலிருந்து அனைத்து பங்கு மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழிமுறைகள் வழங்கப்பட்டன. 7 நாட்கள் முதல் 10 நாட்கள் வரை நடத்த அறிவுறுத்தப்பட்டது. ஏப்ரல் 25 முதல் மே 10 க்குள் **Lock Down With Jesus** என்ற பெயரில் நடத்த கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதற்கு உதவும் விதத்தில் நற்செய்தி நிலையத்தின் சார்பாக ஒரு **WhatsApp Group** உருவாக்கப்பட்டு அதில் அனைத்து தலைமையாசிரியர்களும் சேர்க்கப்பட்டு **VPV** (பயிற்சி விழா) எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்றும் அதற்கான விரிவான தகவல்களும் அந்த ஏழு நாட்களும் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட **Task-** களின் மாதிரிகளும் வழங்கப்பட்டன. இந்த வருடம் **VPV** மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து நடத்தக் கேட்டுக்கொள்ளப்பட்டது. மழலைகள் முதல் 4 ஆம் வகுப்பு வரை முதற்குழு, 5 ஆம் வகுப்பு முதல் 7 ஆம் வகுப்பு வரை இரண்டாம் குழு, வகுப்பு 8 முதல் வகுப்பு 12 வரை மூன்றாம் குழு எனப்பிரிக்கப்பட்டனர்.

ஆயரின் அறிவுரைபடி இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் அனைத்து அருட்தந்தையர்களின் ஒத்துழைப்பால் அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் **whattsp App Group** உருவாக்கி அதில் மாணவர்களை சேர்த்து ஒவ்வொரு நாளும் அந்த **Group**-ல் **Task**-கள் அனுப்பினர். அதைப் பார்த்து மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே **Task**-கள் முடித்து அன்றைய தினமே அனுப்பி வைத்தார்கள். ஆசிரியர்கள் அதை மதிப்பீடு செய்து ஒரு நோட்புக்கில் எழுதி வைத்தனர்.

மேலும் நற்செய்தி நிலையம் **Lock Down With Jesus** என்ற **whattsp App Group** புதிதாக தொடங்கியது. அதில் அனைத்து மறைக்கல்வி

நிலையங்களிலிருந்தும் நடக்கின்ற சிறந்த நிகழ்வுகளை பதிவிடுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க அனைத்து மறைக்கல்வி நிலையங்களும் சிறந்த நிகழ்வுகளை பதிவிட்டனர். மாணவர்களின் நிகழ்ச்சிகள் அனைத்தும் வியப்பூட்டும் வண்ணம் மிக அழகாக இருந்தது.

## நன்றிகள்

இவ்வாண்டு **(VPV)** விசுவாசப்பயிற்சி விழா மாணவர்கள் இல்லத்தில் இருந்தாலும் அவர்களுக்கு சமூக ஊடகம் வழியாக நடத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கியதோடு மட்டுமல்லாமல் பங்குத்தந்தையர்கள் கூட்டத்தின் போது கலந்தாலோசித்து திட்டங்களை வகுத்த பாசமிகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இவ்வருடம் விசுவாசப்பயிற்சி விழா சற்று வித்தியாசமான முறையில் சமூக ஊடகம் வழியாக மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைத்து அருட்தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், ஒத்துழைத்த பெற்றோர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரி-வித்துக்கொள்கின்றோம். **Lock Down With Jesus** என்ற பெயரில் நடைபெற்ற விசுவாசப்பயிற்சி விழாவானது மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே இல்லங்களில் பீடங்கள் அமைக்கவும் தூய ஆவி பாடல்கள் பாடி செபிக்கவும் செபமாலைகள் சொல்லவும் இறைவார்த்தைகள் படிக்கவும், மிகச்சிறந்த தளமாக அமைந்தது. விசுவாசப்பயிற்சி விழா ஆனது சமூக ஊடகம் வழியாக நடத்த முன்வந்த அனைத்து மறைக் கல்வி நிலையங்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகள்.

அருட்தந்தை

பிரின்ஸ் மாலியில்,
இயக்குநர்.

## பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன், சீனாய் இறையியல் நிறுவனத்தின் இயக்குநர்

மறைமாவட்ட தலைமைச் செயலாரகவும் ஆவணக் காப்பாளராகவும் பணியாற்றி வரும் பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் அவர்கள் சீனாய் இறையியல் நிறுவனத்தின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இப்பணியை மார்ச் 10, 2020 அன்று ஏற்றுள்ளார்.

# அன்றாடம் செய்வதற்காக கொடுக்கப்பட்ட ஆன்மீகச் செயல்கள்

## அரை வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை

**ஒன்றாம் நாள்:**

- செய்திப் பாடல்
- இல்லம் ஒரு ஆலயம்

**இரண்டாம் நாள்:**

- மாறுவேடப்போட்டி
- சீடர்களை அறிவித்தல்

**மூன்றாம் நாள்:**

- வசனம் சொல்லுதல்

**நான்காம் நாள்:**

- சிறு ஜெபம் சொல்லுதல்
- திருவிவிலிய கலைத்திறன்

**ஐந்தாம் நாள் :**

- திருப்பாடுகள்

**ஆறாம் நாள்:**

- பாடல் காட்சிப்படுத்துதல்

**ஏழாம் நாள்:**

- செபமாலை தயார் செய்தல்

**எல்லா நாட்களும்:** இறைவார்த்தை மரம் தயாரித்தல்

## ஐந்தாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை:

**ஒன்றாம் நாள்:**

- இல்லம் ஒரு ஆலயம்

**இரண்டாம் நாள்:**

- செல்பி வீடியோ
- வழிபாட்டு முறை
- வினாடி–வினா போட்டி

**மூன்றாம் நாள்:**

- கையெழுத்து இதழ்

**நான்காம் நாள்:**

- புனிதர்களை அறிவோம்
- திருவிவிலிய கலைத்திறன்

**ஐந்தாம் நாள்:**

- ஜெபங்கள் மனப்பாடம் செய்தல்
- திருப்பாடல் பாடுதல்

**ஆறாம் நாள்:**

- பாடல் காட்சிப்படுத்துதல்
- ஆல்பம் தயார் செய்தல்

**ஏழாம் நாள்:**

- ஜெபமாலை தயார் செய்தல்

**எல்லா நாட்களும்:** இறைவார்த்தை மரம் தயாரித்தல்

## எட்டாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை

**ஒன்றாம் நாள்:**

- நமது ஆலயம் அறிவோம் (உருவான ஆண்டு, அருட்தந்தையர்கள், பொன்விழா வருடம்)
- பாதை வரைபடம் தயார் செய்தல்
- இல்லம் ஒரு ஆலயம்

**இரண்டாம் நாள்:**

- வாட்ஸ்அப் சொற்பொழிவு போட்டி
- செல்பி வீடியோ
- வழிபாட்டுமுறை வினாடி-வினா போட்டி

**மூன்றாம் நாள்:**

- கைவினைப் பொருட்கள் செய்தல்
- கையெழுத்து இதழ்

**நான்காம் நாள்:**

- டிஜிட்டல் புகைப்பட கொலாஸ்
- திருவிவிலிய கலைத்திறன்
- புனிதர்களை அறிவோம்

**ஐந்தாம் நாள்:**

- திருவிவிலியம் அறிவோம்
- திருப்பாடல் பாடுதல்
- ஜெபங்கள் மனப்பாடம் செய்தல்
- சீரோ மலபார் திருச்சபை பற்றி அறிவோம்

**ஆறாம் நாள்:**

- பாடல் காட்சிப்படுத்துதல்
- ஆல்பம் தயார் செய்தல்

**ஏழாம்நாள்:**

- செய்தித்தாள் உருவாக்குதல்
- ஜெபமாலை தயார்செய்தல்

**எல்லா நாட்களும்:** இறைவார்த்தை மரம் தயாரித்தல்

# புளியரை ஆலய அர்ச்சிப்பு

செங்கோட்டை திருத்தூது தளங்களில் ஒன்றான புளியரை புனித குழந்தைத் தெரசா ஆலயமானது, பங்குமக்கள் மற்றும் அருட்தந்தை செபி ஆகியோரின் முயற்சியால் புதுப்பிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட ஆலயமானது மார்ச் 1, 2020 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## உயிரூட்டுபவர்களுக்கான திசையமைவுப் பயிற்சி

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் உயிரூட்டுபவர்களுக்கான பயிற்சி மார்ச் 15, 2020 பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வில், தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் 35 க்கும் மேற்பட்ட அருட்சகோதரிகளும் பொதுநிலையினரும் பங்கேற்றனர்.

இளைஞர்களை வழிநடத்துவது முதியவர்களின் கடமை. குறிப்பாக ஆன்மீக வாழ்வுக்குத் தேவையான நெறிமுறைகளைக் கற்பிப்பது காலத்தின் கட்டாயம். ஆகையால், இளையோர் இயக்கச் செயல்பாடுகளை மேலும் தீவிரப்படுத்தும் நோக்குடன், உயிரூட்டுபவர்களுக்கான சிறப்புப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பெருவாரியான பங்குகளிலிருந்து அருட்சகோதரிகளும் பொதுநிலையினரும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், முதலில் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இளையோரை அணுக வேண்டிய முறை குறித்தும், அவர்களின் வளர்ச்சியில் முதியோர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் பேசினார். நல்ல வழிகாட்டிகளாக, இளையோரின் பிரச்சனைகளுக்கு செவிகொடுத்துக் கேட்பவர்களாக, ஆக்கப்பூர்வமாக அவர்களின் வாழ்வில் பங்கேற்பவர்களாக, அவர்களோடு உடன் பயணிப்பவர்களாக உயிரூட்டுபவர்களாக இருக்க



வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பின்னர், குருகுல முதல்வர் அவர்கள் சுமார் 30 நிமிடங்கள், நம்பிக்கையில் ஆழப்பட இளையோருக்கு என்னென்ன வழிகளில் உதவி செய்ய வேண்டுமெனக் கூறினார். வாழ்வில் அர்ப்பண உணர்வுடன் இளையோர் நலனைக் கருத்தில் கொண்டு ஊக்குவிப்பாளர் பணியை ஆற்றும் போது அது அவர்களுக்கு பேருதவியாக இருக்கும் என வலியுறுத்தினார். பின்னர் தந்தை அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு இனிப்பும் வழங்கப்பட்டது. உயிரூட்டுபவர்களுக்கான கூட்டம் நடத்த ஒத்துழைப்புக் கொடுத்த அனைத்து அருட்தந்தையர்களுக்கும், மறைமாவட்ட தலைமைச் செயற்குழுவிற்கும் நன்றிகள்.

## ஊரடங்கு நாட்களில் இளையோர் இயக்கச் செயல்பாடுகள்

### புனித வாரத்தில் ஆன்மீக வாழ்வு

கொரோனா நோயின் பாதிப்பினால் ஊரடங்கில் இருந்த நாட்களில், இளையோர் இயக்கப்பணிகள் இணையத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டன. ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதி வரை, **Corona with Jesus** என்னும் தலைப்பில் நம்பிக்கையில் வலுவூட்டும் போட்டிகள் மறைமாவட்ட மக்களுக்காக, **WhatsApp** வழியாக நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கும் அதிகமான நபர்கள் பங்கேற்றார்கள்.

வீட்டில் பலிபீடம் அமைத்தல், பாஸ்கா அப்பம் தயாரித்து குடும்பத்தோடு இணைந்து முறித்தல், இயேசுவின் சிலுவைப்பாடு நிலைகளின் வரைபடம் வரைதல், கழிவுப் பொருட்களிலிருந்து அழகு பொருள் தயாரித்தல், ஈஸ்டர்





வாழ்த்துகளை குடும்பத்தினருக்கு தெரிவிப்பதை காணொலிக் காட்சியாக அனுப்புதல், கொரோனா நாட்களில் தனிமைப்படுத்தலின் அவசியத்தை வலியுறுத்தும் தகவல் அட்டை தயாரித்தல், ஆயரின் பிறந்த நாளுக்கு வாழ்த்தட்டை தயாரித்தல், ஊரடங்கு நாட்களில் ஆன்மீகம் அனுபவம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுதல், கோவிட் 19 குறித்து கவிதை எழுதுதல் மற்றும் இறுதியாக, 1கொரிந்தியர் 13 ஆம் அதிகாரம் மனப்பாடம் செய்து காணொலியாக அனுப்புதல் போன்ற பத்து பணிகள் கொடுக்கப்பட்டன. முதல் மூன்று இடங்களைப் பெற்றோருக்கு ஊக்கப்பரிசு அன்றாடம் ரூ. 500, ரூ. 300 ரூ. 200 என முதல், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்கு உறுதுணையாக நின்ற அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

**இளையோர் மறைக்கல்வி**

24.04.2020 தொடங்கி இளையோருக்கான போட்டி **WhatsApp** வழியாக நடத்தப்பட்டு வருகின்றது. இதில் 250 க்கும் மேற்பட்ட இளையோர்கள் பங்கேற்கிறார்கள். அன்றாடம் மூன்று கேள்விகள் அளிக்கப்பட்டு அதற்கான பதில்கள் பெறப்படுகின்றன. இது 25 நாட்களைத் தாண்டி நடந்துகொண்டிருக்கிறது. 17.05.2020 அன்று, **YouCat** முதல் அதிகாரத்திலிருந்து கேள்வி கேட்கபட்டு **Google forms** வழியாக விடைகள் பெறப்பட்டன. அன்றைய தினம் 270 இளையோர்கள் பதில்களை அனுப்பியிருந்தார்கள்.

இயேசுவில் இளையோர் வளர்வதற்காக எடுக்கப்படும் முயற்சிகளில் உதவி செய்யும், அருட்தந்தை ஜாண்பால் அவர்களுக்கும், அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்களுக்கும் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றிகள்.

**கொரோனா உதவிகள்**

பங்களவில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா நிவாரணப்பணிகள் இளையோர்கள் ஆக்கப்பூர்வமாகப் பங்கேற்றனர். இளையோர் இயக்கம் சார்பாகவும் நிவாரண நிதிகள் அலகளவில் மேற்கொள்ளப்பட்டன.

ஷீஜி, செயலர்

VINCENT-DE-PAUL
வின்செந்தியர்

# தக்கலை மத்திய சபை

## கொரோனா உதவிகள்

தக்கலை மத்திய பேரவையின் கீழ் செயல்படும் ஏழு வட்டார சபைகளின் சார்பாக கொரோனா நிவாரண உதவிகள் பல்வேறு வகைகளில் செய்யப்பட்டது.

**ஆறுகாணி**

ஆறுகாணி கிளை சபையின் சார்பாக கொரோன நிவாரணமாக 50 ஏழை குடும்பங்களுக்கு அரிசி, பயிறு, மற்றும் காய் கனிகள் வழங்கப்பட்டன. இதற்கு நிதி உதவி மற்றும் இதர உதவிகள் புரிந்த நல்உள்ளகளுக்கும், எமது பங்கு தந்தை அவர்களுக்கும் நன்றியை தெரிவிக்கிறோம்.

**காரோடு**

காரோடு பங்கில் செயல்படும் கிளைசபைகள் சார்பில் சுமார், 115 குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டது.

முக்கூட்டுக்கல் கிளைச்சபை சார்பில் 120 குடும்பங்களுக்கும், ஆறுகாணி கிளை சபை சார்பில் ரூ. 7000 க்கு உதவிகள் வழங்கப்பட்டன.

**பாலப்பள்ளம்**

பாலப்பள்ளம் கிளைச் சபைகள் சார்பில் புற்றுநோயாளி ஒருவருக்கு ரூ. 8000, பங்கு தந்தை அருள்தந்தை ஜான் பால் மற்றும் கிளை சபை தலைவர் சகோ. தங்கப்பன் முன்னிலையில் வழங்க பட்டது.



வயலங்கரை கிளைச்சபை சார்பில் 50 குடும்பங்களுக்கும், ஆனையடி கிளைச்சபை சார்பில் ரூ. 10000 அளவிலும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

**கிள்ளியூர்**

கிள்ளியூரில் செயல்படும் கிளைச்சபைகள் சார்பாக ரூ. 3000



க்கு உதவிகள் வழங்கப்பட்டன.

**முழுக்கோடு, பள்ளிக்கோணம்** கிளைச்சபைகளும் நிவாரண உதவிகள் வழங்கின.

**காட்டாத்துறை**

காட்டாத்துறை ஆண்கள் கிளைச் சபை சார்பில், ரூ. 4500 அளவிலான உணவுப் பொருட்களும், கொரோனா நிவாரண நிதியும் ஏழைகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை அலெக்ஸ் அவர்களும் கிளைச்சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**சேனங்கோடு**

சேனங்கோடு கிளைச்சபை சார்பில் கொரோனா பேரிடர் நிவாரண உதவி வழங்கப்பட்டது. ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை சாஜன் அவர்கள் வழிகாட்டுதலில், கிளைச்சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து ரூ. 5000 அளவிலான உதவிகள் செய்தனர்.

**கைசாலவிளை**

கைசாலவிளை பங்கில் பங்குத்தந்தை தாமஸ் தெக்கேத்தல சி.எம்.ஐ. அவர்களின் வழிகாட்டுதலில், மகளிர் கிளைச்சபைச் சார்பில் ரூ. 4000 அளவில் பேரிடர் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

நிவாரண உதவிகள் வழங்கிய அனைத்து கிளைச்சபைகளுக்கும் நன்றி.

.

மறைவட்ட செய்திகள்




# நித்திரவிளை மறைவட்டம்

**புனித ஜார்ஜியார் திருத்தலம் -முஞ் சிறை**

மார்ச் மாதம் 19-ஆம் தேதி புனித சூசையப்பர் திருநாள்



கொண்டாடப்பட்டது காலை 6:30 மணிக்கு திருப்பலியும் மாலை 6:00 மணிக்கு சிறப்பு செபமாலை வழிபாடும் நற்கருணை ஆராதனை வழிபாடும் நடைபெற்றது. S.D கன்னியர் இல்ல 94 ஆவது ஆண்டு விழா காலைத் திருப்பலிக்குப் பின் அன்பகத்தில் வைத்து நடைபெற்றது. கன்னியர் இல்ல தலைவி Sr. நிர்மலின் மற்றும் அருட்சகோதரிகள் பங்குத்தந்தை பங்குமக்கள் முதியோர்கள் அனைவரும் இணைந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர். மாலை நற்கருணை ஆராதனை வழிபாட்டுக்குப் பின் புனிதரின் பெயர் கொண்ட எங்கள் பங்குத்தந்தை ஜோமோன் மற்றும் பங்குமக்களை திரு. சுகுமாரன் அவர்கள் வாழ்த்திப் பேசினார். பாடகற்குழு Feast பாடல் இசைக்க தந்தை அவர்கள் Cake முறித்து அன்பைப் பகிர்ந்து கொண்டார்கள்.

ஏப்ரல் மாதம் பாஸ்கு கால நிகழ்வுகள்: பெரிய வியாழன், புனித வெள்ளி மற்றும் உயிர்ப்பு திருநாள் திருப்பலி ஆலயத்தில் நிறைவேற்றப்பட்டு அனைத்து பங்கு மக்களும் தங்கள் இல்லங்களில் அமர்ந்து பலியில் பங்கேற்கும் விதமாக வசதியாக YouTube மூலம் ஒளிபரப்பப்பட்டது. மேலும் பங்கு பாதுகாவலர்

புனித ஜார்ஜியார் தினத் திருப்பலி 24- 04 -2020 அன்றும் YouTube வழியாக ஒளிபரப்பப்பட்டது. மேலும் ஏழை மக்களுக்கும் பங்கு மக்களுக்கும் பங்கின் சார்பிலும் S.D கன்னியர் இல்லம் சார்பிலும் நலத்திட்ட உதவிகள் பணமாகவும் பொருளாகவும் வழங்கப்பட்டது. மேலும் Lock Down With Jesus VPV 2020, 03- 05- 2020 அன்று தொடங்கப்பட்டு 09- 05- 2020 அன்று முடிவடைந்தது. மேலும் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு விவிலிய மற்றும் வழிபாட்டு அறிவு வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது. அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**புனித அந்தோணியார் ஆலயம் - வயலின்கரை**

விசுவாச பயிற்சி விழாவின்

ஒரு பாகமாக பங்கு அளவில் இல்லங்களில் வைத்து நடத்தப்பட்ட VPV online நிகழ்ச்சி 26-04-2020 முதல் 03- 05 -2020 முடிய 8 நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் மூன்று பிரிவாக மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் பலவகைச் செயல்பாடுகள் வழங்கப்பட்டு அவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் விதம் Lock Down With Jesus நிகழ்வு நடைபெற்றது. சிறப்பாக பங்கெடுத்த மாணவர்களின் திறமையைப் பாராட்டி அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

ஏப்ரல் மாதத்தில் வின்செந்திய உறுப்பினர்கள் ஆதரவற்ற மக்களுக்கு உணவு மற்றும் அன்றாட வாழ்விற்கு தேவையான பொருட்கள் வழங்கி உதவினர்.

**ஜெய மாதா ஆலயம்- நித்திரவிளை**

26- 04- 2020 முதல் 02 -05- 2020 முடிய ஏழு நாட்கள் மாணவர்களுக்கு விசுவாச பயிற்சி விழா (VPV) 2020 சமூக ஊடகம் வழியாக நடத்தப்பட்டது. மாணவர்கள் தங்கள் தனிப்பட்ட திறமைகளை பெற்றோர்களுடன் இணைந்து வெளிப்படுத்த இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பல்வேறு விதமான செயல்பாடுகள் ஒவ்வொரு பிரிவாக ஆசிரியர்கள் மூலம் வழங்கப்பட்டன. மறைக்கல்வி மாணவர்கள் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்த இது சிறந்த தளமாக அமைந்தது.

**புனித சவேரியார் ஆலயம்- வாறுதட்டு**

24- 04 -2020 முதல் 02-05-2020 முடிய விசுவாச பயிற்சி விழா இல்லங்களில் சமூக ஊடகம் வழியாக நடத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் குழுவாக பிரித்து வழங்கப்பட்டது. மாணவர்கள் உற்சாகமாக செயல்பட்டதோடு பெற்றோர்களும் ஒத்துழைப்புக்

கொடுத்தனர்.

இந்த ஊரடங்கு நாட்களில் எல்லாக் குடும்பங்களுக்கும் பங்கு சார்பில் நலத்திட்ட உதவிகள் பணமாகவும் பொருளாகவும் வழங்கப்பட்டன. கன்னியர் இல்லத்தில் இருந்து நலத்திட்ட உதவிகள் செய்யப்பட்டன. மேலும் பாஸ்கு காலத்தில் **whattsApp** மூலம் இறைவார்த்தை பகிர்வு எல்லா குடும்பங்களுக்கும் தந்தையவர்களால் வழங்கப்பட்டது. சமூக ஊடகம் மூலம் வினாடி-வினா போட்டி ஏப்ரல் மாதம் நடைபெற்றது. மத்தேயு நற்செய்தியில் இருந்து தினமும் 2 அதிகாரம் வீதம் அளிக்கப்பட்டது. போட்டிகள் தினமும் மாலை 7:30 - 8:00 மணி வரை நடைபெற்றது. இவ்வாறு ஊரடங்கு காலம் பங்கு மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

## சூசைபுரம் மறைவட்டம்

**புனித சூசையப்பர் ஆலயம்**

**ஆலய 60-ஆம் ஆண்டு ஜூபிலி**

19- 03- 2020 அன்று 60-ஆம் ஆண்டு தொடக்க விழாவானது நடத்தப்பட்டது. திருப்பலி, ஆன்மிக நிகழ்வுகள் அனைத்திற்கும் ஆயர் அவர்கள் தலைமை ஏற்றார். மறைவட்ட அருட்தந்தையர்கள்



கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர். சூசையப்பர் பெயர் கொண்ட அருட்தந்தையர்களுக்கு சிறப்பாக வாழ்த்துக்கள் கூறப்பட்டன.

ஊரடங்கு நாட்களில் மக்கள் காலத்தை பயனுள்ள விதத்தில் செலவிடும் எண்ணத்துடன் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஏழு குழுக்களாக பிரிக்கப்பட்டு, விவிலியத்தை மையமாக்கிய போட்டிகள் நடத்தப்பட்டன.

கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்த குடும்பங்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் பங்கு சார்பாக பணம் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டது.

**கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயம்**

**ஆயர் அவர்களின் வருகை**

15 –03– 2020 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆயர் அவர்கள் சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுத்து, மறையுரை வழங்கினார். திருப்பலிக்குப் பின் மறைக்கல்வி, மற்றும் பக்த இயக்கங்களை பார்வையிட்டு அறிவுரையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். VPV ஏப்ரல் 25 முதல் மே 4–ஆம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற்றது. இறைவசனங்கள் மனப்பாடம் செய்தல், மாறுவேடப்போட்டி, உவமைகளை படங்களாக வரைதல், விவிலிய நிகழ்வுகளை நடித்துக் காட்டுதல், இறை வார்த்தை மரம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.



மாணவர்கள் உற்சாகத்தோடு பங்கெடுத்தனர். பங்குத்தந்தை, ஆசிரியர்கள் ஒத்துழைப்பு கொடுத்தனர்.

03–05– 2020 மற்றும் 10–05– 2020 ஆகிய தினங்களில் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் திருப்பலி தேவா தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

கொரோனாவால் வேலையை இழந்த மக்களுக்கு பணமும்

உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டது. இதற்கான நிதியை பங்கு நிர்வாகம் பங்குமக்களிடமிருந்து பெற்றது.

**மாங்கரை புனித யாகப்பர் ஆலயம்**

ஏப்ரல் 3 மற்றும் 4-ம் தேதிகளில் 14 வீடுகள் சேர்ந்து சிலுவைப்பாதை நடத்தினர். திங்கள் முதல் வியாழன் வரை காலை 5.45 மணி முதல் நற்கருணை ஆராதனை, சிலுவைப்பாதை, திருப்பலி நடைபெற்றது.

**கொரோனா உதவி**

40 குடும்பங்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள், காய்கனிகள் வழங்கப்பட்டது. ஒரு நோயாளிக்கு மருத்துவ உதவி செய்யப்பட்டது. VPV ஏப்ரல் 22 முதல் 28 வரை நடத்தப்பட்டது. மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர்.

**கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்**

கிறிஸ்து அரசர் ஆலயத்தில் புனித வார நிகழ்வுகள் நடைபெற்றது. குருத்து ஞாயிறு திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து குருத்தோலை அனைத்து குடும்பங்களுக்கும் உறவிய ஒருங்கிணைப்பாளர்கள் வழியாக வழங்கப்பட்டது. 09-04- 2020 அன்று பாஸ்கா வியாழன் திருப்பலி மற்றும் நிகழ்வுகள் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. ஒவ்வொரு வீடுகளிலும் பாஸ்கா அப்பம் தயாரிக்க வழிகாட்டப்பட்டது. புனித வெள்ளி மற்றும் திருப்பாடுகளின் வரலாறு தியானித்து திருமுழுக்கு புதுப்பித்தல் மற்றும் உயிர்ப்பு திருநாள் திருப்பலி ஆகியவை ஆலயத்தில் நடத்தப்பட்டு அதனை நேரலையாக குமரி தொலைக்காட்சி மற்றும் YouTube மூலமாக ஒளிபரப்பப்பட்டது.

பங்கில் அனைத்துக் குடும்பங்களையும் இணைத்து whattsApp Group உருவாக்கப்பட்டது. அனைத்து குடும்பங்களிலும் வழிபாட்டு மேடை அமைக்க அறிவுறுத்தப்பட்டு திருப்பலியில் பங்கேற்க ஆவன செய்யப்பட்டது. 16-04-2020 அன்று தொடங்கி விவிலிய வினாடி வினா போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தினமும் இரண்டு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு வினாக்கள் கேட்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். அதுபோல விவிலிய வரைபடமும் விவிலிய நிகழ்வுகளின் படம்வரைதல் போட்டியும் நடைபெற்றது.

**சங்கிலி ஜெபமாலை**

மறை மாவட்ட அனைத்து தந்தையர்களின் சங்கிலி ஜெபமாலையில் பங்குத் தந்தையின் நேரம் வரும்பொழுது பங்குத் தந்தையோடு இணைந்து பங்கு மக்களும் செபமாலை செபிக்கின்ற நிகழ்வு நடைபெற்றது.

**பேரிடர் நிவாரண உதவி**

கொரோனா நிவாரண நிதியாக அனைத்து குடும்பங்களுக்கும் தலா ரூபாய் 500 வீதம் வழங்கப்பட்டது. இதில் சுமார் 110 குடும்பங்கள் பயன் பெற்றன. அதுபோன்று பங்கில் உறுப்பினர் அல்லாத குடும்பங்களுக்கும் பிற கிறிஸ்தவ மற்றும் இந்து குடும்பங்களுக்கும் சுமார் 250 ரூபாய் அளவில் உணவுப் பொருட்களும் ரூபாய் 300 பணமும் வழங்கப்பட்டது. இதில் சுமார் 30 ஏழை குடும்பங்கள் பயன் பெற்றன. அரை மணி நேர இடைவெளியுடன் ஒவ்வொரு உறவிய குடும்ப பிரதிநிதிகள் நிதி உதவி பெற ஆலயம் வந்தனர். சமூக இடைவெளியுடனும் முக கவசத்துடனும் ஆலயம் வந்து அவர்கள் பங்குத் தந்தையை சந்தித்து ஒருவருக்கொருவர் நலன் விசாரித்த நிகழ்வு நெகழ்ச்சிக்குரியதாக அமைந்தது. பங்கில் 25 –04–2020 தொடங்கி விசுவாசப்பயிற்சி விழா சிறப்பாக நடைபெற்றது. விசுவாசப்பயிற்சி விழா online மற்றும் offline வழியாக நடைபெற்றது.

**திருக்குடும்ப ஆலயம்**

**தக்காளிவிளை**

29– 4 –2020 முதல் 03– 05– 2020 வரை விசுவாச பயிற்சி விழா நடைபெற்றது. பங்குத்தந்தை Fr. சுபின் தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்கள் இணைந்து இதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயல்முறை திட்டம் வகுத்தனர். Online மூலம் Lock Down With Jesus என்ற தலைப்பில் VPV நன்முறையில் நடைபெற்றது.

**நிதி உதவி**

நோயாளிகளுக்கு ரூபாய் 1000 வைத்து வழங்கப்பட்டது. மேலும் 40க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 500 வைத்து அத்தியாவசிய பொருட்கள் வாங்க உதவி வழங்கப்பட்டது.

**மாதாபுரம் புனித தோமையார் ஆலயம்**

வாழ்வாதாரம் இழந்த ஏழை குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

## ஆறுகாணி மறைவட்டம்

ஆறுகாணி திருக்குடும்ப ஆலயம் சார்பாக பங்குத்தந்தை டோபின் அவர்களால் ஏழைகளுக்கு உணவுப்பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டது. ஊரடங்கால் வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு இது பேருதவியாக இருந்தது.

# மஞ்சாலுமூடு மறைவட்டம்

மஞ்சாலுமூடு மறைவட்டத்தில், அனைத்துப் பங்குகளிலும் ஏழைகளுக்கு நிதியுதவியும் பொருளுதவியும் அளிக்கப்பட்டது. விடுமுறை விசுவாசப்பயிற்சியும் சிறந்த முறையில் நடத்தப்பட்டது.



**காரோடு**

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் மார்ச் 19 அன்று பங்குக்காவலர் விழா கொண்டாடப்பட்டது. மாலை, 5.30 மணிக்கு ஜெபமாலையும் தொடர்ந்து நவநாள் மற்றும் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இல்வாழ்வு இயக்குநர் தந்தை ஜிம்மி தெக்கேக்கடுமத்தில் அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரை வழங்கினார். விழா முடிவில் அனைவருக்கும் அன்பின் விருந்து அளிக்கப்பட்டது.

**புனித மார்ட்டின் டி போரஸ் கழுவந்திட்டை**

கழுவந்திட்டைப் பங்கில் விசுவாச பயிற்சி விழாவானது சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. இது சமூக ஊடகம் வழியாக ஐந்து நாட்களில் நடத்தப்பட்டது. மறைக்கல்வி மாணவர் மாணவியர் கொடுக்கப்பட்ட அன்றாடப் பணிகளை சிறப்பாக செய்து முடித்தனர்.

**தூய பவுல் ஆலயம் தெற்றியோடு**

இரண்டு மாதங்களாக ஆலயத்தில் பொதுவான ஆராதனைகள் நடைபெறவில்லை எனினும் மக்கள் வீடுகளிலிருந்து செபிக்கத் தவறவில்லை. மறைக்கல்வி மாணவர் மாணவியருக்கென விசுவாச பயிற்சி விழா நடத்தப்பட்டது. ஆசிரியர்கள் ஒத்துழைப்பு கொடுத்தனர். மேலும் பங்கு சார்பில் நோய்த்தடுப்பு ஆற்றலை அதிகப்படுத்தும் நோக்குடன் பங்கு சார்பில் கபசுப குடிநீர் கொடுக்கப்பட்டது. மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதால் குடும்பம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் வழங்கப்பட்டது.

# படந்தாலுமூடு மறைவட்டம்

செய்தி சேகரிப்பு: ஹேமா | லதா | ரீனா





CORONA RELIEF - VINCENTIANS AND TCYM MEMBERS





CORONA LOCKDOWN DAYS WITH JESUS

VPV 2020 - LOCK DOWN WITH JESUS



நற்செய்தி நிலையம்

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570